## 6 ஆய்வுப்பொருள்: ஒன்று:-
## உலகில் வெளிப்படும் இறைச் செயற்பாடு

### 1.6. பாஸ்கா மறைபொருளில் எமது விசுவாசம்





- இங்கு தரப்பட்ட தலைப்புக்கள் பற்றிய உங்கள் கவனத்தைச் செலுத்தவும். இவை பற்றிக் கலந்துரையாடவும்.

**பாவ அடிமை நிலையிலுள்ள உலகை யார், எப்பொழுது, எவ்வாறு விடுவித்தார்?**

**முழு மனித விடுதலையே இயேசுவின் தூதுரைப்பணியாகும். அவரது மறைதூதுப்பணி பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றில் உச்சநிலையை அடைகிறது.**

## பாஸ்கா மறைபொருள்



மறைபொருள் என்பது விளங்கிக் கொள்ள முடியாததொன்றல்ல. விளங்கி முடிவுக்குக் கொண்டு வரமுடியாத ஒன்றாகும்.

பாஸ்கா மறைபொருள் என்பது எமது மீட்பராகிய இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பனவாகும்.

பாவத்தின் பிடியிலுள்ள முழு மனுக்குலத்தையும் விடுதலையளிக்க இயேசு தனது வாழ்வை அவர்களுக்காக இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தார். மனுக்குலத்தின் பாவப்பழக்கத்தை தனது தோள்களில் சுமந்தார். முழு மனுக்குலத்தினதும் மீட்புக்காக அவர் தனது வாழ்வை பாவத்துக்குப் பரிகாரப் பலியாக இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

### பாஸ்கா மறைபொருளின் அருட்கொடை

இருளின் ஆதிக்கத்தை வேரறுத்து முழு மனித விடுதலையின் ஒளி உதயமாகியது. இதன் வழியாக எம் நாளாந்த வாழ்க்கையின் பிரச்சினை, சிக்கல்களுக்கு இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு (பாஸ்கா மறைபொருள்) விடை தருகின்றது,



இலவச விநியோகத்திற்காக

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சி மிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும்.

(உரோ. 6:3-6)


**"இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பில் பங்குகொள்ளும் ஒவ்வொருவருக்கும் இவ்வுலக மரணம் முடிவல்ல. மாறாக அது, புதுவாழ்வின் ஆரம்பமாகும்."**

- இக்கூற்றின் அடிப்படையில் எமது அன்றாட வாழ்வின் சுமைகளையும் சோகங்களையும் விளங்கிக் கொள்வது எப்படி? துன்ப துயரங்களை எவ்வாறு விளக்கிக் கூறுவீர்?



இலவச விநியோகத்திற்காக

நீரே எனது
அன்பார்ந்த மகன்



என் இறைவா!
என் இறைவா!
ஏன் என்னைக்
கைவிட்டீர்?'
(மாற். 15:34)

பெண்களுக்குள்
ஆசீர்வதிக்கப்
பட்டவள் நீரே!

உமது உள்ளத்தை
ஒரு வாள் ஊடுருவும்.
(லூக். 2:35)

அவர் பெயர் யோபு;
கடவுளுக்கு அஞ்சி
நடப்பவர். அசைக்க
முடியாத விசுவாசம்
கொண்டவர்.



கருப்பையிலேயே
நான் இறந்திருக்கக்
கூடாதா?'
(யோபு. 3:11)



இலவச விநியோகத்திற்காக

துன்பங்கள் →
- இறை தண்டனை அல்ல.
- இறைவன் விதித்த சாபமும் அல்ல.
- இறைச் செய்திகள்.

அன்றாட சிலுவை வழி, நாமும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பில் பங்காளிகளாகிறோம்.

1. தூய அன்பினால் தம் வாழ்வை அர்ப்பணித்த
2. இறைத் தந்தையின் சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த
3. இறை அன்பிற்கு இறை அன்பினால் பதிலளித்த
4. தமது அளவுகடந்த அன்பினால் மனிதனை அன்பு செய்த
5. தம்மைக் காட்டிக்கொடுத்த, மறுதலித்த, துன்புறுத்திய மனிதனையும் இறை அன்பினால் அன்பு செய்த
6. உடல், உள, ஆன்மீக முழுமையான மீட்பைக் கொணர்ந்த

→ இயேசுவே முதன்மையானவர்

**மகிமையுடன் உயிர்த்த கிறிஸ்து**

இயேசுவின் வரையறுக்கப்பட்ட உடல்
அளவுகடந்த இறை அன்பால்
பொங்கி வழிதலே உயிர்ப்பாகும்.

மனித வரையறைகளைக் கடந்து மகிமை மிக்கவராக உயிர்த்தெழுந்தார்.

- அனைத்தையும் ஊடுருவிப் பார்க்கவும் செல்லவும் செயற்படவும் ஆண்டவருக்கு முடியும்.
- முழுப் படைப்பிலும் அவர் பிரசன்னமாக இருக்கிறார்.
- அனைவரிலும் பிரசன்னமாக அவர் இருக்கிறார்.
- அனைவரோடும் ஒரே வகையில் உறவை உருவாக்குகிறார்.

> நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்.
>
> (யோவா. 10:10)

**செயற்பாடு:**

- உமக்கு அருகில் இருப்பவரோடு ''வாழ்க்கை என்றால் என்ன'' என்பதைப் பற்றி கலந்துரையாடுக.
- வகுப்பில் கருத்துக்களை முன்வைக்கவும்.

> மனிதன் இவ்வுலகிலும் மறு உலகிலும் மகிழ்ச்சியாக வாழ்வதே இறைவனுக்கு மகிமை.
>
> - புனித இரேனியுஸ்

## புதிய ஆதாம், புதிய உலகு.

மனிதனுடைய கீழ்ப்படியாமையால் இழந்துபோன இறைபிள்ளைகள் என்ற உரிமையை இயேசுவின் கீழ்ப்படிதலினால் மீளப்பெற்றுள்ளோம். கிறிஸ்துவே புதிய ஆதாம். முழு உலகும் புனிதமடைந்துள்ளது. இறை வாழ்வின் அனுபவம் மனிதனுக்கு உரித்தாகின்றது. மூவொரு இறைவனின் வாழ்வில் பங்குபெறத் தடையாக இருந்தவை எல்லாம் தகர்த்தெறியப்பட்டன. பாவத்தின் தீய விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட இவ்வுலகிலேயே நிறைவான உலகமும் படைக்கப்பட்டுள்ளது. இதனை விசுவாசத்தின் ஒளியிலேயே கண்டறியலாம். இந்த நிறைவான உலகம் தூய ஆவியினுள் மகிழ்ச்சியால் நிறைந்த நித்தியமான உலகமாகும்.



இலவச விநியோகத்திற்காக

தன் ஒரே பேறான மகனின் உயிர்ப்பில் தம் சுவீகாரப் பிள்ளைகளாகிய எமக்கும் உடலின் உயிர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அழிவுக்குரிய எமது உடல், பாஸ்கா அருளில் மகிமைக்குரிய உடலாக உயிர்த்தெழுந்து என்றென்றைக்கும் நித்திய வாழ்வில் பங்குகொள்கிறது. அவ்வுடல் கிறிஸ்துவின் உயிருள்ள உடலாம் நற்கருணையை அடிக்கடி உட்கொள்ளுவதன் வழியாக மென்மேலும் ஊட்டம் பெற்று நித்திய மகிமையை நெருங்குகின்றது.

கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்.

(எபே. 5:2)



கல்லறையோடு முடிந்துபோகிற ஒரு மனிதனில் அல்லாமல் சாவை வென்று உயிர்ப்பும் உயிருமாயிருக்கின்ற கிறிஸ்துவில் கட்டப்பட்டதுதான் கிறிஸ்தவமாகும். அவர் உயிருள்ளவர் என்பதை எப்பொழுதும் நாம் அறிந்து கொள்ள முடியும். உயிருள்ள கிறிஸ்துவோடும் அவரது இதயத்தோடும் தொடர்பு வைத்திருக்கவும் அத்தொடர்பினை ஆழமாக்கிக் கொள்ளும் அளவுக்கு நாம் உண்மையுள்ள சீடர்களாவோம். இதனால் நாம் உண்மையாகவே உயிருள்ள உடலாகிய நற்கருணையால் ஊட்டம் பெற்று வாழ்வதால் நித்திய மகிமையை நெருங்குவோம்.

எந்தளவிற்கு நாம் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் பங்குபெறுகின்றோமோ அந்தளவிற்கு நாமும் உலகமும் நலம் பெறமுடியும்.



இலவச விநியோகத்திற்காக

**ஆராயவும் - சிந்திக்கவும்**

மரணத்தை வென்று உயிர்த்த கிறிஸ்து பற்றிய நற்செய்தி வாசகங்களிலும் திருமுகங்களிலும் வெளியிடப்பட்டவற்றை வாசித்து, சிந்தித்து வாழ்வோடு தொடர்புபடுத்திக் கொள்ளவும்.

*மத். 28:1-11.*

*மாற். 16:1-16.*

*லூக். 24:1-49.*

*யோவா. 20:1-29.*

*1கொரி. 15:12-58.*

*கொலோ. 1:18.*

**மாணவர் செயற்பாடு:**

1. மகிமையுடன் உயிர்த்த ஆண்டவருக்கு செபம் ஒன்று எழுதுக.
2. உயிர்ப்புப் பாடல்கள் சிலவற்றைத் தெரிவு செய்து சிறிய புத்தகம் ஒன்று தயாரிக்கவும். அவற்றைப் பாடி இறைவனைப் புகழவும்.
3. உமது குடும்பத்தில் எழும் அன்றாட சுமைகளில் ஒன்றை, நீரும் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும் சவாலாக ஏற்று செயற்படும் முறையை எடுத்துக் கூறுக.
4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திலிருந்து கிறிஸ்தவராகிய நீர் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்கள் எவை எனக் கலந்துரையாடவும்.



இலவச விநியோகத்திற்காக



**சிறைக் கைதியின் விடுதலை**

மரண தண்டனை பெற்ற குற்றவாளி ஒருவன் இருந்தான். மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நாள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இக்குற்றவாளி பலத்த பாதுகாப்பு மத்தியில் சிறையில் இருந்தான். ஒவ்வொரு நாளையும் தனது இறுதி நாள் என நினைத்து, நினைத்து இறந்து கொண்டேயிருந்தான். அது ஒரு வெள்ளிக்கிழமை. சிறைக்காவலர் சிலர் சிறைச்சாலைக்குள் வந்தனர். தனது இறுதி நாள் வந்துவிட்டதென இக்குற்றவாளி நினைத்தான். இவ்வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், கால்கள் இரண்டும் பலமிழந்து கீழே விழுந்தான். காவலர்கள் அவனைத் தாங்கிக் கூட்டிச் சென்றனர்.

''பரபாஸ், உன்னை விடுவிக்கிறோம்'' எனக் காவலர்கள் கூறினர். ஏதோ ஒரு கனவு என நினைத்து அவன் ஆச்சரியப்பட்டான். ''மனிதா, உன்னை விடுவிக்கிறோம்'' எனக் காவலர்கள் கூறி அவனை முன்னால் தள்ளினர்.

விடுவிக்கப்பட்ட குற்றவாளி தெருவில் நடந்து செல்லுகையில் தொலைவில் மூன்று சிலுவைகளில் அறையுண்டு இருந்த மூவரைக் கண்டான். அக்குற்றவாளிகள் யாராக இருப்பார்கள் எனச் சிந்தித்துக்கொண்டு செல்லும்பொழுது, வழியில் சந்தித்த சிலரிடம் இதைப்பற்றி விசாரித்தான்.

*''அதோ, நடுவில் உள்ள சிலுவையில் மரித்தவரால் தான் நீ விடுவிக்கப்பட்டாய்.''*



இலவச விநியோகத்திற்காக

## உமது மேலதிக அறிவிற்காக:

கிறிஸ்துவின்
பாஸ்கா மறை பொருளின் நற்செய்தி பற்றி
கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி கற்பிக்கின்றது.
ஆண்டவரது போதனையைக் கேட்பதற்காக மக்கள் திரளாகக் கூடினர்.
சட்டங்கள், யெருசலேம் ஆலயம், இறைவன் பற்றி
அவர் வெளிப்படுத்திய கருத்துக்களை
இஸ்ராயேல் மதத் தலைவர்கள் ஏற்க மறுத்தனர்.
பாவிகளை மன்னித்தல் இறைவனின் பாவமன்னிப்புக்கு சமமான செயல் என
அவர்கள் ஏற்க மறுத்தனர்.
லூக்கா 15ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள காணாமற்போன ஆடு, காணாமற்போன
திராக்மா, காணாமற்போன மகன் போன்ற உவமைகள் இதற்கான
உதாரணங்களாகும்.
இயேசு தாமும் தந்தையும் ஒன்றாயிருக்கிறார்கள் என போதித்ததை அவர்களால்
ஏற்றுக்கொள்ள முடியவில்லை,
எனவே அவருக்குத் தீர்ப்பளிக்கும் படி பிலாத்துவிடம் அழைத்து வந்தனர்.
யூதமக்களுக்காக மட்டுமல்லாமல், முழு மனுக்குலத்துக்காகவுமே இயேசு பாடுகள்
அனுபவித்தார் என மறைக்கல்வி கற்பிக்கின்றது.
கல்லறையில் இருந்த வானதூதர் "அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" என
அறிக்கையிட்டார் (மாற் 16:6).
மனித வரலாற்றில் நிகழமுடியாத நிகழ்ச்சியை இவ்வாக்கியம் வியம்புகின்றது.
இயேசுவின் உயிர்ப்பு ஒரேயொரு தடவை நிகழ்ந்ததொன்றாகும்.
எக்காலமும் வேதனையுறும் மக்களுக்காகவே இயேசு உயிர்த்தார்.
இலாசரையும், நயீன் கைம்பெண்ணின் மகனையும் இயேசு உயிர்பெறச்
செய்திருந்தாலும் அவர்கள் மீண்டும் இறந்தார்கள்.
கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்ட செயல் ஒரு புதிய நிகழ்ச்சியாகும்.
அவர் மரித்து மீண்டும் வந்தவர் அல்லர்,
அவர் மரணத்தை வென்று உயிர்த்தவர்.
உயிர்ப்பினால் அவர் கால வரையறைகளைக் கடந்தவராக உள்ளார்.
அவர் எங்கும் பிரசன்னமாக இருக்கிறார்.
அவர் வரலாற்றுக்கும் எல்லோருக்கும் உரிமையுடையவராகின்றார்.
அவர் எம்மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # *571-679*



இலவச விநியோகத்திற்காக